# டாஸ்மாக்

## தமிழ்நாட்டின் பேரிடர்

### ஆய்வு அறிக்கை



ஜெயராம் வெங்கடேசன்
அஜய் குமார் தண்ணீர்குளம்

வெளியீடு: மகசூல் டிரஸ்ட்



**மது ஒழிப்பிற்காக இறுதி வரை போராடிய காந்தியவாதி சசி பெருமாள் அவர்களுக்கு இந்த அறிக்கை அர்ப்பணிக்கப்படுகிறது.**

## வடிவமைப்பு

இரா. உமாபதி
தினகரன்

## ஆய்வு செய்தவர்கள்

சுரபி (மெக்கில் பல்கலைக்கழகம், கனடா)
யுவராஜ் கோசாமி (மெக்கில் பல்கலைக்கழகம், கனடா)
செல்வமணி
பிரியா (மெக்கில் பல்கலைக்கழகம், கனடா)
ஜூலி (மெக்கில் பல்கலைக்கழகம், கனடா)
கனிமொழி

## தலைமை ஆய்வாளர்கள்

ஜெயராம் வெங்கடேசன்
அஜய் குமார் தண்ணீர்குளம்

# டாஸ்மாக்
## ஓர் ஆய்வறிக்கை

ஜெயராம் வெங்கடேசன் & அஜய் குமார் தண்ணீர்குளம்

### முன்னுரை

தமிழ்நாட்டில் இன்று ஒரு இடத்திற்கு வழி சொல்லவேண்டுமென்றால் கூட டாஸ்மாக் கடைக்கு எதிர் தெரு, பக்கத்துக்கு தெரு என்றுதான் பதில் சொல்லவேண்டியுள்ளது. இந்த அளவுக்கு பெருகியுள்ள டாஸ்மாக் கடைகள் பலரோடு வாழ்க்கையில் பின்னி பிணைந்து விட்டது என்றே சொல்லலாம். ஆனால் இது தமிழ்நாட்டில் எந்த அளவிற்கு பாதிப்புகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதற்கான ஆய்வுகள் வெளிவருவது மிக மிக அரிதாக உள்ளது. பல சமூக பிரச்சனைகளை பற்றி ஆராய்ந்து வெளியே தகவல் கொண்டு வரும் தமிழக பல்கலைக்கழகங்கள் அனைவரும் இந்த விஷயத்தில் மௌனமாக இருப்பது ஆச்சரியத்தையும், அதிர்ச்சியையும் தருகிறது. எனவே டாஸ்மாக்கினால் ஏற்படும் சமூக பொருளாதார பிரச்சனைகள் குறித்து ஒரு ஆய்வு மேற்கொண்டோம். இந்த ஆய்வின் முக்கிய நோக்கமானது மக்களை நேரடியாக சந்தித்து அவர்கள் வாழ்க்கையில் டாஸ்மாக் எந்த விதமான சமூக மற்றும் பொருளாதார பிரச்சனைகளை ஏற்படுத்தியுள்ளது என்ற தகவல்கள் சேகரித்து தொகுப்பதே ஆகும்.

ஒட்டு மொத்தத்தில் டாஸ்மாக் ஒரு மிகப்பெரிய சமூக மற்றும் பொருளாதார சீர்கேடுகளை ஏற்படுத்துகிறது என்பதும் ஜனநாயக முறைப்படி மக்கள் கையில் முடிவெடுக்கும் உரிமை இருந்தால் மக்கள் டாஸ்மாக் கடைகளை மூடி இருப்பார்கள் என்பதும் தெள்ளத்தெளிவாக இந்த ஆய்வில் தெரிகிறது.

## ஆய்வு முறை

தமிழ்நாட்டில் 5 மாவட்டங்களில் (கடலூர்,திருச்சி,காஞ்சிபுரம்,திண்டுக்கள் மற்றும் சென்னை) இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த மாவட்டங்களில் 15 கிராம மற்றும் நகர பகுதிகளில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. புள்ளியல் முறைப்படி இந்த 15 கிராம மற்றும் நகரங்களில் ஒவ்வொரு 5 வது வீடு சென்று ஆய்வு நடத்தப்பட்டது. ஒரு வேலை அந்த வீட்டில் உள்ளவர்கள் இல்லை என்றாலோ அல்லது ஆய்வுக்கு பதில் அளிக்க விருப்பம் இல்லை என்றாலோ, அந்த வீட்டை விட்டுவிட்டு அடுத்த 5 வது வீட்டுக்கு சென்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதில் ஆண்கள் 644 பேரிடமும் பெண்கள் 573 பேரிடமும் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வில் கண்டது என்னவென்றால் ஒரு சில இடங்களில் ஆண்கள் தாங்கள் குடிப்பதை வெளிப்படையாக ஒப்புக்கொள்ளவில்லை. அதேபோல் சிலர் குடித்த நிலையில் இருந்தனர். பெண்கள் ஆண்களை விட வெளிப்படையாக இந்த ஆய்விற்கு பதில் அளித்தனர். எனவே பெண்களின் பதில்களை மையமாக வைத்து இந்த ஆய்வறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது.

## ஆய்வின் முடிவுகள்

இந்த ஆய்வில் சராசரியாக எத்தனை சதவீதம் ஆண்கள் குடிக்கின்றனர், எவ்வளவு குடிக்கின்றனர், மதுவினால் பொருளாதார ரீதியாக அவர்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்பு, சுகாதார சீரழிவு மற்றும் மதுவினால் ஏற்படும் சமூக பிரச்சனைகளான பெண்கள் மற்றும் குழந்தைகள் மீதான வன்முறைகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும் இந்த முடிவுகளின் சதவீதத்தை வைத்து தமிழ்நாட்டில் மதுவினால் ஏற்பட்டுள்ள விளைவுகள் கணக்கிடப்பட்டுள்ளது. டாஸ்மாக் மூடுவது குறித்து மக்களின் கருத்து கேட்க்கப்பட்டது.

## தமிழ் நாட்டில் எத்தனை பேர் குடிக்கிறார்கள்??

பெண்களிடம் தங்கள் கணவருக்கு குடிக்கும் பழக்கம் உள்ளதா என்று கேட்கப்பட்டது. 573 பெண்களில் 330 பெண்கள் தங்கள் கணவருக்கு குடிப்பழக்கம் இருப்பதாக தெரிவித்தனர். அதாவது 58 சதவீதம் ஆண்களுக்கு குடிப்பழக்கம் உள்ளது தெரியவந்தது. இதை தமிழ்நாட்டின் அளவில் ஒப்பிட்டு பார்த்தோமேயானால் மொத்தம் உள்ள 2.3 கோடி வீடுகளில் கிட்டத்தட்ட 1 கோடியே 32 இலட்சம் வீடுகளில் குடிக்கும் ஆண்கள் உள்ளார்கள்.




இதில் என்ன பெரிய ஆச்சரியம்? ஒரு சில பேர் எப்பொழுதாவது ஒரு வேலை குடிப்பார்கள், பொழுதுபோக்கிற்காக குடிப்பார்கள் என்று நீங்கள் கேட்பது புரிகிறது. ஆனால் நம் தமிழக மக்கள் எந்த அளவிற்கு குடிக்கின்றார்கள் என்பதற்கான விடை ஒரு மிகப் பெரிய அதிர்ச்சியை தந்துள்ளது.

## தமிழ்நாட்டில் எத்தனை பேர் தினமும் குடிக்கிறார்கள்??

பொழுதுபோக்கிற்காகவும், நண்பர்களுக்காகவும் குடிக்க ஆரம்பித்தவர்கள் ஒரு காலத்தில் மதுவுக்கு அடிமையாகும் பொழுது அவர்கள் குடும்பங்கள் பாழுங்கிணற்றில் விழுவதை நாம் பல பேர் கண் கூடாக பார்த்திருக்கின்றோம். எனவே தமிழ்நாட்டில் எத்தனை குடும்பங்கள் பாழுங்கிணற்றில் டாஸ்மாக்கினால் தள்ளப்பட்டுளளது என்ற கேள்விக்கு அதிர்ச்சியான பதில் கிடைத்துள்ளது.

குடிப்பவர்களின் விகிதாச்சாரம்.

| | |
|---|---|
| தினமும் குடிப்பவர்கள் | 53% |
| வாரத்திற்கு 3-4 நாட்கள் | 17% |
| வாரத்திற்கு 1-2 நாட்கள் | 24% |
| எப்பொழுதாவது குடிப்பது | 6% |

இதை தமிழ்நாட்டு அளவில் பார்த்தோம் என்றால், 1.32 கோடி குடிக்கும் ஆண்களில் கிட்டத்தட்ட 70 இலட்சம் ஆண்கள் தினமும் குடிக்கிறார்கள். ஒரு சில வீடுகளில் பெண்கள் தங்கள் கணவர் குடிப்பதை பற்றி உண்மையை சொல்வது தரக்குறைவாக இருக்கும் என்று கருதி உண்மையை மறைத்தது தெளிவாக தெரிந்தது. எனவே இந்த ஆய்வு, உண்மை சதவீதத்தை விட சற்றுக் குறைவாகவே இருக்கும். தினமும் குடிக்கும் 70 இலட்சம் ஆண்களை தவிர கிட்டத்தட்ட 22 இலட்சம் பேர் வாரத்தில் 3-4 நாட்கள் குடிக்கின்றனர்.




மேலும் 83 சதவீதம் பெண்கள் தங்கள் கணவர் குடிப்பது கடந்த 10 ஆண்டுகளில் அதிகரித்துள்ளது என்பதை தெரிவித்துள்ளனர். மற்றும் 52 சதவீதம் பெண்கள் தங்கள் கணவர் கடந்த 10 ஆண்டுகளில் தான் குடிக்கவே ஆரம்பித்தார் என்றும் தெரிவித்துள்ளனர்.

## டாஸ்மாக் கடைகளும் அதன் தூரமும்

உலகத்தில் பல இடங்களில் நடந்த ஆய்வுகளில் ஒருவர் குடிக்கு அடிமையாகும் பல காரணங்களில் ஒரு முக்கிய காரணம் மது எவ்வளவு எளிதில் கிடைப்பது என்பது தெளிவாக வெளிவந்துள்ளது.

2000 வருடத்தில் வெறும் 4000 மது கடைகள் மட்டுமே தமிழகத்தில் இருந்தது.அது இப்பொழுது 7000 கடைகளாக அதிகரித்து உள்ளது. மது எளிதாக கிடைப்பதற்கும் மக்கள் குடிக்கு அடிமை ஆவதற்க்கும் ஒரு ஆழ்ந்த சம்பந்தம் இருப்பதாக உலகில் பல ஆய்வுகள் தெரிவித்துள்ளன. உதாரணத்திற்கு 2013 ல் பின்லாண்டில் செய்யப்பட்ட ஆய்வில் பாருக்கு 1 கி.மீ தூரத்திற்குள் இருப்பவர்கள் மற்றவர்களை விட அதிகமாக குடிக்கு அடிமை ஆகிறார்கள் என்பது வெளிவந்தது. அதேபோல் 2011 ல் ஆஸ்திரேலியாவில் செய்யப்பட்ட ஆய்வு ஒன்றில் அதிக கடைகள் உள்ள பகுதிகளில் குடிப்பது மிக மிக அதிக அளவில் இருப்பதாகவும், அது அந்த சமுதாயத்திற்கே சீரழிவு ஏற்படுத்துவதும் கண்டறியப்பட்டுள்ளது.

நமது ஆய்விலும் டாஸ்மாக் கடையின் தூரம் மக்களை குடிக்கு அடிமைப் படுத்துவதில் ஒரு முக்கிய பங்கு வகிப்பதை தெளிவாக காட்டியுள்ளது. டாஸ்மாக் கடைகள் 1 கி.மீ தூரத்திற்கு மேலே உள்ள இடங்களில் 50% மக்களுக்கு குடிப்பழக்கம் இருப்பதும் 1 கி.மீ க்குள் உள்ள இடங்களில் 70% மக்களுக்கு குடிப்பழக்கம் இருப்பதும் தெரிகிறது.



மேலும் தினமும் குடிக்கும் மக்கள் அதாவது குடிக்கு அடிமை ஆனவர்கள் 1 கி.மீ மேலே உள்ள இடங்களில் 22% மாகவும் 1கி.மீ க்குள் உள்ள இடங்களில் 45% மாகவும் உள்ளது.

| | குடிப்பவர்கள் சதவீதம் | தினமும் குடிப்பவர்கள் சதவீதம் |
|---|---|---|
| கிராமம் | | |
| டாஸ்மாக் 1கி.மீக்குள் | 69% | 31% |
| டாஸ்மாக் 1கி.மீக்கு மேல் | 52% | 22% |
| நகரம் | | |
| டாஸ்மாக் 1கி.மீக்குள் | 71% | 54% |
| டாஸ்மாக் 1கி.மீக்கு மேல் | 28% | 22% |

நகரங்களில் கடைகள் குறைவான தூரத்தில் உள்ளதால், இவ்வாறு காட்டக்கூடுமே என்று ஐயம் ஏற்படலாம். கிராமம் நகரம் என்று பிரித்து பார்க்கும் போதும் டாஸ்மாக் கடைகளின் தூரத்திற்கும் மதுவிற்கும் ஆழ்ந்த சம்பந்தம் இருப்பதை மேலே உள்ள படத்தில் காணலாம்.

## டாஸ்மாக் கடைகளும் பெண்கள் மீதான வன்முறைகளும்

நாம் ஒரு ஆண் ஆதிக்க சமுதாயத்தில் வாழ்ந்து வருகிறோம்.பெண்கள் மீதான வன்முறையும் ஆதிக்கமும் நாளடைவில் குறைந்து ஒரு சமமான சீரான சமுதாயம் அமைப்பதில் அரசுக்கு முக்கிய பங்கு உள்ளது. மாறாக அரசு மதுவினால் பெண்கள் மற்றும் குழந்தைகள் மீதான வன்முறை பெரிய அளவில் தமிழ்நாட்டில் அதிகரித்திருப்பதே இந்த ஆய்வில் காண முடிகிறது.

பெண்களிடம் மூன்று கேள்விகள் கேட்கப்பட்டது. உங்கள் கணவர் உங்களை திட்டுவாரா? உங்கள் கணவர் உங்களை அடிப்பதுண்டா? உங்கள் குழந்தைளை உங்கள் கணவர் அடிப்பதுண்டா? கீழே உள்ள வரைபடத்தில் குடித்திருக்கும் கணவர்களுக்கும் குடிப்பழக்கம் இல்லாதவர்களுக்கும் ஒரு பெரிய வித்தியாசம் காண முடிகிறது.




முக்கியமாக குடிக்காதவர்களில் தன் மனைவியை திட்டுபவர்கள் 25% என்றால் அது தினமும் குடிப்பவர்களில் 84% ஆக உள்ளது. குடிக்காதவர்களில் 8% தங்கள் மனைவியை அடிக்கிறார்கள். ஆனால் தினமும் குடிப்பவர்களில் 64% பேர் தங்கள் மனைவியை அடிக்கிறார்கள்.

சில வருடங்களுக்கு முன் உலக வங்கியின் பொருளாதார ஆய்வாளர் டாக்டர் விஜயேந்திர ராவ் ஆய்விலும் மதுவிற்காக அதிகமாக செலவழிக்கும் ஆண்கள் அதிக அளவில் பெண்கள் மற்றும் மற்றவர்கள் மீது வன்முறையில் ஈடுபடுகின்றனர் என்பதை ஆய்வு முடிவில் தெரிவித்திருந்தார்.

## டாஸ்மாக்கினால் ஏற்படும் பொருளாதார சீரழிவு

அரசாங்கங்களுக்கு மதுவினால் வரும் வருமானம் முக்கியமானதாக கருதப்படுகிறது.ஆனால் பொருளாதார ரீதியாக மக்களுக்கு எவ்வளவு இழப்பு ஏற்படுகின்றது? தங்கள் கணவர் குடிப்பதற்காக ஒவ்வொரு முறையும் எவ்வளவு செலவழிப்பார் என்று கேட்டோம்.

அவர்கள் அளித்த பதில்களை அவரவர் குடிப்பதற்கேற்ப பெருக்கி பார்த்தோமேயானால் சராசரி ஒரு குடிமகன் மாதம் ரூ 4312 மதுவிற்காக செலவிடுகிறார். தினமும் குடிப்பவர்கள் கிட்டத்தட்ட ரூ 6552 மாதத்திற்கு செலவிடுகிறார்கள்.இது கிட்டத்தட்ட அவர்களது ஒட்டுமொத்த மாத வருமானத்திற்கு சமமானதாகும்.




நாம் இதை தமிழ்நாட்டிற்கு என்று பார்த்தோமேயானால்,1.32 கோடி குடிப்பழக்கம் உள்ள ஆண்கள் கிட்டத்தட்ட ரூ 44,769 கோடி மதுவிற்காக செலவு செய்கிறார்கள்.

| குடிக்காக மக்கள் செலவு செய்யும் பணம் | மாதம் செலவிடும் பணம் | வருடத்திற்கு செலவிடும் பணம் | 3 ல் 2 பங்கு நாட்களில் தான் அவர்கள் கையில் பணம் இருக்கிறது என்று எடுத்துக் கொண்டால் | குடிக்கும் மக்கள் எண்ணிக்கை | மொத்த பணம் செலவு |
|---|---|---|---|---|---|
| தினமும் குடிப்பவர்கள் | 6552 | 78624 | 52678 | 6986496 | 368035194024 |
| வாரத்திற்கு 3-4 நாட்கள் | 2184 | 26208 | 17559 | 2221140 | 39001802835 |
| வாரத்திற்கு 1-2 நாட்கள் | 1443 | 17316 | 11602 | 3190365 | 37013723924 |
| எப்பொழுதாவது குடிப்பது | 534 | 6408 | 4293 | 848072 | 3641077398 |
| | | | | | |
| மொத்தம் | | | | | 447691798180 |

## மதுவினால் ஏற்படும் வேலை இழப்பு

**குடியினால் தங்கள் கணவர் தொழில் / வேலை எந்த அளவிற்கு பாதிக்கப்படுகின்றது என்று கேட்டோம்.**

| | |
|---|---|
| மதுவினால் வேலை இழப்பு ஏற்படும் மக்களின் சதவீதம் | 34 |
| மதுவினால் சராசரி ஒரு மாதத்திற்கு வேலை இழப்பு நாட்கள் | 14 |
| குடிக்கும் தமிழர்கள் | 13246073 |
| மாதத்திற்கு குடியினால் வேலை இழக்கும் மக்கள் | 4495717 |
| மாதத்திற்கு குடியினால் வேலை இழப்பு நாட்கள் | 63974055 |
| மாதத்திற்கு 3ல் 2 நாட்கள் தான் வேலை இருந்திருக்கும் என்று எடுத்துக் கொண்டால், குடியினால் ஏற்பட்ட வேலை இழப்பு நாட்கள் | 42862617 |
| ஒரு வருடத்திற்கு ஏற்படும் வேலை இழப்பு நாட்கள் | 514351406 |
| சராசரி ஒருநாள் கூலி | 400 |
| மொத்தம் குடியினால் மக்களுக்கு ஏற்படும் பண இழப்பு | 205740562222 |

முக்கியமாக குடிக்கு அடிமையானவர்கள் காலையிலேயே குடிப்பதால் அவர்கள் வேலையில் பெரிதும் இழப்பு ஏற்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 34 சதவீதம் பெண்கள் தங்கள் கணவர் குடிப்பதால் வேலை இழப்பு ஏற்பட்டுள்ளது என்று கூறினார்கள். சராசரியாக இந்த 34 சதவீத வீடுகளில் ஒரு மாதத்திற்கு 14 நாட்கள் அவர்கள் கணவர் குடித்துவிட்டு வேலைக்கு செல்வதில்லை என்றும் தெரிவித்தனர்.

ஒரு நாள் கூலி ரூ 400 என்று எடுத்துக் கொண்டு நாம் தமிழ்நாட்டு அளவில் பார்த்தோம் என்றால் மதுவினால் ஏற்படும் வேலை இழப்பால் ஒரு வருடத்திற்கு மக்கள் இழக்கும் பணம் ரூ 20,570 கோடி ஆகும். பொருளாதார ரீதியாக தினமும் குடிப்பவர்களுக்கு டாஸ்மாக் என்பது ஒரு மிகப் பெரிய வறுமையை உண்டாக்கும் திட்டமாக செயல்படுகிறது.

## டாஸ்மாக்கினால் ஏற்படும் சுகாதார செலவுகள்

குடியினால் ஒருவருக்கு உடல் ரீதியாக பல பிரச்சனைகள் ஏற்படலாம்.அதேபோல் குடித்துவிட்டு ஏற்படும் விபத்துகளை நாம் கண்கூடாக பார்க்கிறோம். 26 சதவீதம் பெண்கள் தங்கள் கணவருக்கு கடந்த பத்து ஆண்டுகளில் குடியினால் உடல் நல பிரச்சனை ஏற்பட்டு மருத்துவமனையில் சேர்க்கும் நிலை ஏற்பட்டது என்று தெரிவித்துள்ளனர். கடந்த 1 ஆண்டில் மட்டும் பார்த்தோமேயானால் 4.4 சதவீதம் பெண்கள் தங்கள் கணவருக்கு உடல் நல சீர்கேடு ஏற்பட்டதாகவும், 2.8 சதவீதம் பெண்கள் தங்கள் கணவருக்கு விபத்து ஏற்பட்டதாகவும் தெரிவித்துள்ளனர்.

சராசரியாக உடல் நல சீர்கேடுக்கு ரூ34,772 செலவழித்ததாகவும், விபத்துகளுக்கு ரூ 2100 செலவழித்ததாகவும் ஆய்வில் தெரிய வருகிறது.

| கடந்த ஒரு ஆண்டில் - சுகாதார செலவு ரூ 2100 கோடி | |
|---|---|
| மதுவினால் ஏற்பட்ட விபத்து - சதவீதம் | 2.79 |
| மதுவினால் ஏற்பட்ட மருத்துவ பிரச்சனை - சதவீதம் | 4.39 |
| விபத்துக்கு செலவழித்த சராசரி செல்வு | 2100 |
| மருத்துவ பிரச்சனையினால் ஏற்பட்ட சராசரி செலவு | 34772 |
| தமிழக அளவில் விபத்து ஏற்பட்ட மக்கள் | 370007 |
| தமிழக அளவில் மருத்துவ செலவ செய்த மக்கள் | 581944 |
| தமிழக அளவில் மக்களுக்கு விபத்தினால் ஏற்பட்ட செலவு | 777014659.7 |
| தமிழக அளவில் மக்களுக்கு ஏற்பட்ட மருத்துவ செலவு | 20235362108 |
| | |
| மொத்தம் மருத்துவ செலவு | 21012376768 |

இதை வைத்து நாம் தமிழகம் முழுவதற்கும் கணக்கு செய்தால், கிட்டத்தட்ட 5.8 இலட்சம் பேருக்கு உடல் பிரச்சனையும், 3.7 இலட்சம் பேருக்கு விபத்துகளும் நேர்ந்திருக்கக் கூடும். இதனால் கடந்த 1 ஆண்டில் மக்கள் செலவு செய்த பணம் கிட்டத்தட்ட ரூ 2100 கோடி ஆகும்.

ஒட்டு மொத்தமாக, மதுவிற்காக செலவழிப்பது (ரூ 44769 கோடி ) மதுவினால் ஏற்படும் வேலை இழப்பினால் ஏற்படும் இழப்பு ( ரூ 20574 கோடி), மருத்துவ செலவு (ரூ 2100 கோடி ) என்று இந்த மூன்றையும் சேர்த்து பார்த்தால், தமிழக மக்கள் கிட்டத்தட்ட ரூ 67,444 கோடி இழக்கிறார்கள். ஒரு சில வீடுகளில் மதுவினால் இறந்த ஆண்களினால் ஏற்பட்ட பொருளாதார இழப்புகளையும், மற்ற செலவுகளையும் சேர்க்கவில்லை.அவற்றை சேர்த்தால் மேலும் உயரும்.

மற்றொரு பக்கம் அரசாங்கத்திற்கு மதுவினால் வரக்கூடிய வருமானம் கிட்டத்தட்ட ரூ 25000 கோடி ஆகும். பொருளாதார ரீதியாக பார்க்கும் போது, எந்த ஒரு திட்டத்திலும் அதனால் ஏற்படும் பயன்களும், செலவுகளும் பார்ப்பது அவசியம். ரூ 25000 கோடி வருமானத்திற்காக ரூ 67,444 கோடி இழப்பதா?

அதுவும் அந்த ரூ 25000 கோடி அரசு வருமானம், சாதாரண மனிதனிடம் போய் சேரும் போது அதில் பாதி கூட சென்றடையாது என்பதும் நாம் அறிந்ததே.

## மதுவினால் ஏற்படும் சுகாதார சீர்கேடுகள்

தகவல் பெறும் உரிமை சட்டம் மூலம் மதுவினால் ஏற்படும் நோய்களுக்காக எவ்வளவு பேர் கடந்த 15 ஆண்டுகளில் அரசாங்க மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று கேட்டிருந்தோம். பதில் வந்த 4 மருத்துவமனைகளிலும் மதுவினால் ஏற்படும் வியாதிகள் கடந்த 10 ஆண்டுகளில் பன்மடங்கு அதிகரித்திருப்பது தெள்ளத் தெளிவாக வெளி வந்துள்ளது. அதற்கான வரைபடங்களை நாம் இங்கே காணலாம். அதுமட்டும் இன்றி கல்லீரல் நோய் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டவர்களில் 80 சதவீதத்திற்கும் மேலானோருக்கு மதுவே காரணம். மேலும் சாலை விபத்துகளில் அனுமதிக்கப்பட்டோரில் 80 சதவீதத்திற்கு மேலானோர் மது அருந்தி இருந்தனர்.




கல்லீரல் நோய் சம்பந்தமாக 3 அரசு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை - 2000 to 2015.
600
500
400
300
200
100
0
எண்ணிக்கை
2000
2001
2002
2003
2004
2005
2006
2007
2008
2009
2010
2011
2012
2013
2014
வருடம்
கல்லீரல் நோய்
மதுவினால் ஏற்பட்ட கல்லீரல் நோய்


4 அரசாங்க மருத்துவமனையில் விபத்தினால் அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை
8000
7000
6000
5000
4000
3000
2000
எண்ணிக்கை
2000
2001
2002
2003
2004
2005
2006
2007
2008
2009
2010
2011
2012
2013
2014
வருடம்




## மக்கள் விருப்பம்

நாம் பல இடங்களில் அரசியல் கட்சிகளும் மற்றவர்களும் டாஸ்மாக் கடை மூடப்பட வேண்டுமா இல்லையா என்ற விவாதங்களைப் பார்த்துள்ளோம்.ஆனால் மக்கள் என்ன விரும்புகிறார்கள் என்பதை கண்டறிய வேண்டியது முக்கியம். ஆண்கள் டாஸ்மாக் கடையை மூடுவது விரும்பவில்லை என்ற கருத்தை தொலைக்காட்சியில் பல முறை கேட்டிருப்போம். எனவே இந்த கேள்வி ஆண்கள் மற்றும் பெண்கள் இருவரிடம் கேட்கப்பட்டது. மக்களின் விருப்பம் மிக மிக தெளிவாக வெளிவந்துள்ளது. 95 சதவீதம் பெண்களும் 89 சதவீதம் ஆண்களும் டாஸ்மாக் கடையை மூடவேண்டும் என்று கருத்து தெரிவித்துள்ளனர்.




**பெரும்பாலான ஆண்கள் கடை பக்கத்தில் இருப்பதால் தான் நாங்கள் குடிக்கிறோம் என்றும், இதை அகற்றிவிட்டால் நாங்கள் குடிப்பது குறையும் என்றும் தெரிவித்தனர்.**

**இதே கேள்வியை நாங்கள் வேறு விதமாகவும் கேட்டோம் தமிழக அரசாங்கம் எந்த பிரச்சினையில் முதல் கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டோம். கல்வித் தரத்திலா? சுகாதாரத்திலா? டாஸ்மாக் கடை மூடுவதிலா? சாலைகள் சீரமைப்பதிலா? அல்லது மற்ற பிரச்சனைகளிலா? இதிலும் மக்கள் மிகத் தெளிவாக டாஸ்மாக் கடை மூடுவதில்தான் அரசாங்கத்தின் முதல் கவனம் இருக்கவேண்டும் என்று தெரிவித்துள்ளனர்.**




42% மக்கள் டாஸ்மாக் கடை மூடுவதிலும் 38% மக்கள் கல்வித்தரம் உயர்த்துவதிலும் 12% மக்கள் சுகாதாரத்திலும் அரசு முதல் கவனம் செலுத்தவேண்டும் என்று கூறியுள்ளனர்.

ஆண்கள் பெண்கள் என்று பிரித்து பார்க்கும்போது பெண்களில் 61% பேர் டாஸ்மாக் கடை மூடுவதிலும் 22% கல்வியிலும் 12% சுகாதாரத்திலும் அரசு கவனம் செலுத்தவேண்டும் என்று கூறியுள்ளனர்.


அரசாங்கத்தின் முதல் கவனம் - பெண்கள் விருப்பம்
மற்றவை, 2%
கல்வி, 22%
சுகாதாரம், 12%
சாலைகள், 3%
டாஸ்மாக் கடைகள் முடுவது, 61%


அரசாங்கத்தின் முதல் கவனம் - ஆண்கள் விருப்பம்
மற்றவை, 9%
டாஸ்மாக் கடைகள் முடுவது, 24%
கல்வி, 54%
சாலைகள், 1%
சுகாதாரம், 11%

ஆனால் ஆண்கள், தமிழக அரசாங்கம் கல்வியில் முதல் கவனம் செலுத்தவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளனர். 54% ஆண்கள் கல்வியிலும் 24% ஆண்கள் டாஸ்மாக் கடை மூடுவதிலும் 11% ஆண்கள் சுகாதாரத்திலும் அரசாங்கம் அதிக கவனம் செலுத்தவேண்டும் என்று தெரிவித்துள்ளனர்.

ஜனநாயகப்படி மக்கள் கையில் முடிவெடுக்கும் அதிகாரம் இருக்குமேயானால், டாஸ்மாக் கடைகளை மக்கள் மூடி இருப்பார்கள் என்பது இந்த ஆய்வில் தெளிவாக வெளிவந்துள்ளது.

## மேலும் சில ஆய்வு முடிவுகள்

1) 67 சதவீதம் பெண்கள் தங்கள் கணவர் குடிப்பழக்கத்தால் அவர்கள் இன்னும் ஏழ்மை நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் என்று கருதினர். தினமும் குடிப்பவர்கள் வீட்டில்,89 சதவீதம் பெண்கள் ஏழ்மைக்கு தள்ளப்பட்டுள்ளதாக கருதினர்.

2) குடிப்பவர்கள் அல்லாத வீடுகளில், கணவனை இழந்த பெண்கள் 6 சதவீதம் ஆகும். கணவனுக்கு குடிப்பழக்கம் உள்ள வீடுகளில், கணவனை இழந்த பெண்கள்13.17 சதவீதம் ஆகும்.

3) குடிப்பவர்களில் 11 சதவீதம் பேர், சீர்திருத்த மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் இதில் 74 சதவீதம் பேர் மீண்டும் குடிக்க ஆரம்பித்துள்ளனர்.

## முடிவுரை

1) கடந்த 10 ஆண்டுகளில், மக்கள் எந்த அளவிற்கு குடிக்கு அடிமை ஆகும் நிலை ஏற்பட்டுள்ளது என்பது இந்த ஆய்வில் தெளிவாக வெளிவந்துள்ளது.

2) மது இன்று மிகப்பெரிய பொருளாதார மற்றும் சமூக சீரழிவை ஏற்படுத்திக்கொண்டிருப்பது தெளிவாக வெளிவந்துள்ளது.

3) பொருளாதார ரீதியில் மதுவினால் மக்கள் இழக்கும் பணம் அரசுக்கு வரும் வருமானத்தை விட பல மடங்கு அதிகம்.
பெண்கள் மீதான வன்முறையும், குழந்தைகள் மீதான வன்முறையும் மதுவினால் பல மடங்கு உயர்ந்துள்ளது.

4) ஒரு சிலர் பூரண மதுவிலக்கு வேண்டும் என்பார்கள், ஒரு சிலர் அது சாத்தியம் இல்லை என்பார்கள். கடைகள் பக்கத்தில் இருந்தால், மக்களின் குடிப்பழக்கம் அதிகரிப்பது இந்த ஆய்வில் தெளிவாக வெளிவந்துள்ளது. எனவே அரசு குறைந்தபட்சம் முதல் கட்டமாக கடைகளை படிப்படியாக குறைப்பது மிக மிக அவசியம்.

5) திருந்த நினைப்பவர்களில் 74 சதவீதம் பேர் சீர்திருத்த பள்ளிக்கு சென்ற பின்பும் மீண்டும் மதுவிற்கு அடிமையாவது கவலைக்குரிய ஒன்று. அரசாங்கம் இதில் முக்கிய கவனம் செலுத்தவேண்டும்.

6) ஒட்டுமொத்தத்தில் டாஸ்மாக் அரசாங்காத்தின் ஒரு மிகப் பெரிய வறுமை உண்டாக்கும் திட்டமாகவும், தமிழ்நாட்டின் பேரிடராகவும் உள்ளது இந்த ஆய்வில் வெளிவந்துள்ளது.

7) ஜனநாயக முறைப்படி மக்களின் கருத்துக்களை ஏற்று அரசாங்கம் செயல்படவேண்டும்.



ஜெயராம் வெங்கடேசன் அமெரிக்கா ஒகாயோ மாநிலத்தில் உள்ள சின்சினாட்டி பல்கலைக்கழகத்தில் தனது M.S ( Electrical Engineering) படிப்பை முடித்தார்.பிறகு காலிபோர்னியாவில் புள்ளியல் ஆராய்ச்சித் துறையில் துணைத் தலைவராக பணிபுரிந்தார். 2007-ல் சமூகப் பணி செய்வதற்காக இந்தியா திரும்பினார். அடிப்படை கல்வி, விவசாய பிரச்சனைகள் மற்றும் ஊழல் ஒழிப்பு வேலைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார். சிறுகுறு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்த மககூல் என்னும் விவசாய அமைப்பை உருவாக்கினார்.



அஜய்குமார் தண்ணீர்குளம் அமெரிக்காவில் உள்ள மிச்சிகன் பல்கலைக்கழகத்தில் தனது PHD (Physics) படிப்பை முடித்தார். இந்தியா திரும்பி சென்னை IFMR பல்கலைக்கழகத்தின் மைக்ரோபினான்ஸ் பிரிவில் தலைமை ஆராய்ச்சியாளராக பணிபுரிந்தார். விவசாயத்தில் ஒரு மாற்றம் ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் ஜெயராமுடன் இணைந்து மககூல் அமைப்பை நிறுவினார்.

மககூல் இயக்கம் சிறு குறு விவசாயிகளின் வாழ்வாதாரம் மேம்படுவதற்கான வேலைகளில் ஈடுபட்டு வருகிறது. தமிழ்நாட்டில் 5 மாவட்டங்களில் 500 க்கும் மேற்பட்ட விவசாயிகளுடன் வேலை செய்து வருகிறது. மாற்று ஒற்றை நாற்று நடவு, விவசாயிகளுக்கான இயற்கை மண்புழு உரம் தயாரித்தல், குறைந்த நிலம்/நிலம் இல்லாதவர்களுக்கு வீட்டு காய்கறித் தோட்டம் போன்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.


மககூல் டிரஸ்ட்
43/18 குட்டி தெரு
நுங்கம்பாக்கம்
சென்னை- 600034.
9841894700 / 9445392454